1975 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இந்த மரவள்ளிக் கிழங்கிலிருந்து அரிசி தயார் செய்ய முன்கூட்டியே இயந்திரம் ஒன்றை நிறுவி சோதனை பார்க்க மைசூரில் உள்ள புட் டெக்னலஜிகல் அன்ட் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், சோதனைக் கூடத்தோடு தொடர்பு கொண்டுள்ளோம்.

திரு. என். மருதாசலம்: மரவள்ளிக்கிழங்கில் இருந்து சேமியா செய்யப்படுகிறது. இப்போது நமக்கு உணவு தானியங்கள் மிக அத்தியாவசியமாக இருக்கிறது. ஆகவே அந்த சேமியாக் கம்பெனிகளை அதிகப்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஜவ்வரிசி அல்லது சேமியா, இவற்றை தற்போது அரசாங்கம் உற்பத்தி செய்யவில்லை. தனியார் தொழிற்சாலைகளில்தான் ஜவ்வரிசி அல்லது சேமியா உற்பத்தி செய்கிறார்கள். பொதுவாக அதிலிருந்து சுஜி அல்லது ரவை உற்பத்தி செய்கிறார்கள். சென்னையில் ஏராளமாக அந்த ரவை விற்பனையாகிறது. கேரளாவிலிருந்து இங்கு சென்னைக்கு வந்து கடை வைத்து இந்தக் கிழங்கில் இருந்து தயார் செய்யப்பட்ட ரவையை விற்று, பெருவாரியான ஹோட்டல்களில் ரவை மூலம் செய்கிற பலகாரங்களுக்கு இந்த ரவையைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

சிறு உழவர்கள் வளர்ச்சித் திட்டம்

*571 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகளின் அபிவிருத்திக்கென தனித்திட்டம் எதையேனும் அரசு தயாரித்து வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) ஐந்து ஆண்டுகளில் 150 லட்சம் ரூபாய் மூலதனச் செலவு செய்யவும் 876 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கவும் திட்ட மிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : இந்தத் திட்டம் எவ்வளவு ஏக்கர் உள்ள விவசாயிகள் அல்லது கூட்டாக அல்லது தனித் தனியாக, எந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கோவை மாவட்டத்தில் இப்போதுதான் இது தொடங்கப்பட்டு வருகிறது. அது என்னென்ன ப்ளாக்குகள் என்பது என் கைவசம் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சிறிய விவசாயிகளுக்கு என்னென்ன விதத்தில் இதைச் செய்யக்கூடிய ஒரு திட்டம் இந்தத் திட்டத்தில் அடங்கியிருக்கிறது ?

TheHon. THIRU Si. Pa. ADITANAR : I must first say that the Small Farmers Scheme and the Marginal Farmers and Agricultural Labourers' scheme have been merged together.
முன்பு சிறிய விவசாயிகளுக்கு தனித்திட்டமும் சின்னஞ்சிறு அல்லது விவசாயத்தொழிலாளர்களுக்கு ஒரு திட்டமும் செயல் பட்டு வந்தது. இந்த இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைக்கப் பட்டு இப்போது ஒரே திட்டமாக செயல்பட்டு வருகிறது. இதில் (short term) கடன் கொடுக்கப்படுகிறது. பயிர் கடன். அதே போல் லாங்க் டேர்ம் கடன்களும் கொடுக்கப்படுகிறது. வேறு ஆடு, மாடு, கோழி வளர்க்க உதவித் தொகையும் கடனும் கொடுக்கப்பட்டு வருகிறது. அத்திட்டத்தை பூராவாகச் சொல்லப்போனுல் அது 40, 50 பக்கங்கள் இருக்கிறது. சுருக்க மாகச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 572, 573, 574 இவை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

Multi Media Festival at Adiyamankottai

* 575 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether any Multi-Media Festival for offering publicity to the Government programmes were held at Adiyamankottai in Dharmapuri district during September 1974; and

(*b*) if so, the details thereof?

1975 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) அரசு தருமபுரி மாவட்டத்தில் நிறைவேற்ற எடுத்துக் கொண்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்த தகவலை மக்களிடையே பரப்புவதற்கு இம்மாவட்டத்தில் 20—9—1974 முதல் 20—10—1974 வரை பல்துறைப் பணிவிளக்க விழா நடத்தப்பட்டது. இந்த விழாவை அதியமான் கோட்டையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் 20—9—1974 அன்று தொடங்கி வைத்தார். இந்த விழாவை நடத்திட அரசு ரூ. 15,000 செலவு அனுமதித்தது.

Milk in Polythene bags.

*576 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) whether the Dairy Development Corporation proposes to supply milk in Polythene bags in the city of Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பால்வள நிறுவனம் கடந்த 31—3—1975-ம் நாள் முதல் சென்னை மாநகரில் பாலிதின் பைகளில் பால் விற்பனை செய்து வருகிறது. சென்னை மாநகரில் தெரிந்தெடுக் கப்பட்ட பால் விற்பனை நிலையங்களில் பாலிதீன் பைகள் மூலம் பால் விற்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த பை செய்ய எவ்வளவு கிரயமாகிறது? மாதவரத்திலிருந்து கொண்டுவரக்கூடிய பால் நடுவழியில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க என்னமாதிரி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது இந்த பாலிதீன் பைகள் மூலம் பால் வழங்க ப்ரான்ஸ் நாட்டிலிருந்து இயந் திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அந்த இயந்திரங் களுக்கு சுமார் ரூ. 3.36 லட்சம் செலவாகிறது. ஒரு மணி நேரத்தில் ஒரு லிட்டர் கொள் அளவு உள்ள ஐயாயிரம் பைகளை நிரப்பக் கூடிய திறன் பெற்ற அந்த இயந்திரத்தின் மூலம்,